செ.வெ. எண்:494 நாள்: 23.08.2012

## செய்தி வெளியீடு

சமூகத்தில் அனைத்துத் தரப்பு மக்களும் வாழ்வில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், பொருளாதார மற்றும் சமூகரீதியாக பின்தங்கியுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எடுத்து வருகிறார்கள்.

அந்த வகையில், ஆதிதிராவிட பழங்குடியின மக்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களிடமிருந்து விவசாயக் கடன் பெற ஏதுவாக வட்டியில்லா பங்கு மூலதனக் கடன் அரசால் வழங்கப்படுகிறது. வட்டியில்லா பங்கு மூலதனக் கடன்கள் வழங்குவதன் மூலம் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் கடன் பெறும் திறன் அதிகரிக்கப்படுகிறது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு ஆண்டுதோறும் 8,000 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின உறுப்பினர்களுக்கென தலா 250 ரூபாய் வீதம் பங்கு மூலதனமாக, வட்டியில்லாக் கடனாக, 20 லட்சம் ரூபாயை அரசு வழங்கி வருகின்றது. இதன் மூலம் அவர்கள் 5,000 ரூபாய் வரை பயிர்க் கடன்கள் மற்றும் மத்தியக் காலக் கடன்களை பெற வழிவகை செய்யப்பட்டிருந்தது.

தற்பொழுது வழங்கப்பட்டு வரும் பங்கு மூலதனத் தொகை, அதிக அளவு கடனுதவி பெறுவதற்கு போதுமானதாக இல்லாததை கருத்தில் கொண்டு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்களின் பங்கு மூலதனத்தை 250 ரூபாயிலிருந்து 2,500 ரூபாயாக உயர்த்தியும், அதனை மானியமாக வழங்கவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன்படி 40,000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின உறுப்பினர்கள் பயன் பெறும் வகையில் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்கள் அதிகபட்சமாக 50,000 ரூபாய் வரை கடன் பெற இயலும்.

மேற்கூறிய அரசின் நடவடிக்கையால் ஆதிராவிட மற்றும் பழங்குடியினத்தை சார்ந்த விவசாயிகள் மிகுந்த பயன் அடைவர்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள்:- 23.8.2012.